அனுப்புதல்

**வெ.இராசேந்திரன்,**
சமூக ஆர்வலர்,
292, காளியம்மன் கோவில் தெரு,
பொன்னவராயன்கோட்டை உக்கடை,
பட்டுக்கோட்டை - 614602

000346

பெறுதல்

**மேல்முறையீட்டு அலுவலர்,**
முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்,
வேலூர்.

அய்யா,

**பொருள்** : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி - தகவல்கள் வழங்கிட வேண்டி மேல்முறையீடு செய்தல் - சார்பு.

தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி தகவல்களை வழங்கும்படி, பொது தகவல் அலுவலருக்கு 01.12.2017ல் பதிவுத் தபால் அனுப்பியுள்ளேன்.

மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்களின் பெயர்பட்டியல் மற்றும் அவர்கள் தேர்வு நிலைக்கு பெற்று வரும் தர ஊதியம் பற்றிய தகவல்களை வழங்கும்படி விண்ணப்பித்திருந்தேன். அதற்காக கட்டணமாக நீதிமன்ற வில்லை ரூ.10/-ம் இணைத்திருந்தேன். இதுவரையில் எனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை.

தயவு செய்து நான் கோரியுள்ள தகவல்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் மேல்முறையீடு செய்கிறேன்.

**இணைப்பு**
01.12.2017ல் விண்ணப்பித்துள்ள கடித நகல்

தங்கள் உண்மையுள்ள,

12/1/2018

**(வெ.இராசேந்திரன்)**
சமூக ஆர்வலர்

**நகல்**
1)பதிவாளர், தகவல் ஆணையம், சென்னை-18.
2)மாவட்ட ஆட்சியர், வேலூர்

அனுப்புதல்

**வெ.இராசேந்திரன்,**
சமூக ஆர்வலர்,
292, காளியம்மன் கோவில் தெரு,
பொன்னவராயன்கோட்டை உக்கடை,
பட்டுக்கோட்டை - 614602

பெறுதல்

**பொது தகவல் அலுவலர்,**
முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்,
வேலூர்.

அய்யா,

**பொருள்** தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி - தகவல்கள் வழங்கிட வேண்டல் - சார்பு.

தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி கீழ்கண்ட தகவல்களை ஆவணமாக வழங்கிடுமாறு வேண்டப்படுகிறது.

1) வேலூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்களின் பெயர் பட்டியல் தேவைப்படுகிறது.
2) வேலூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்கள் பெயர் வாரியாக போதிக்கும் பாடப்பிரிவின் பெயர் தேவைப்படுகிறது.
3) வேலூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு தேர்வு நிலைக்கு வழங்கப்படும் தர ஊதியம் எவ்வளவு, எந்த ஆணைப்படி வழங்கப்படுகிறது பெயர் வாரியாக தகவல் தேவைப்படுகிறது.

தகவல்கள் பெறுவதற்காக நீதிமன்ற வில்லை ரூ.10/- இத்துடன் இணைக்கப்படுகிறது. தயவுசெய்து தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி, மேற்கண்ட தகவல்களை ஆவண நகலாக வழங்கிடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(வெ.இராசேந்திரன்)
சமூக ஆர்வலர்

**நகல்**
1)பதிவாளர், தகவல் ஆணையம், சென்னை-18.
2)மாவட்ட ஆட்சியர், வேலூர்.